# லலிதா
# நவரத்தின மாலை



லக்ஷ்மி வெளியீடு: 14-04-2001

விஷு வருடம்

சித்திரை 1ம் நாள்

காலை 9.00 மணியளவில்

வரும் சுபநேரத்தில்

கொழும்பு-13, ஆட்டுப்பட்டித்தெரு,

இல. 195 இல் அமைந்துள்ள

லக்ஷ்மி அச்சகத்தினரால்

புதுவருட நாள் அன்று அச்சிட்டு

வெளியிடப்பெற்றது.

14-04-2001

NA

உ

சிவமயம்



# சித்தி விநாயகர் துதி

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசு போதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்.

*(பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம்)*



# தேவாரம்

ஓசை யொலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியேன்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி.

# லலிதா நவரத்தின மாலை

ஞான கணேசா சரணம் சரணம்
ஞான ஸ்கந்தா சரணம் சரணம்
ஞான ஸத்குரு சரணம் சரணம்
ஞான னந்தா சரணம் சரணம்.

## காப்பு

ஆக்கும் தொழில் ஐந்தனலாற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ் வரியால்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
காக்கும் கணநாயக வாரணமே.
மாதா ஜெய ஓம் லலிதாம் பிகையே!
மாதா ஜெய ஓம் லலிதாம் பிகையே!
(மாதா)

# வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்க்

கண்மூடி நெடுங் கனவான தவம்

பெற்றும் தெரியார் நிலையென்னில் அவர்

பெருகும் பிழையென் பேசத் தகுமோ

பற்றும் வயிரப் படைவாள் வயிரப்

பகைவர்க் கெமனாக எடுத் தவளே

வற்றாத அருட் சுனையே வருவாய்

மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே!

(மாதா)

# நீலம்

மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக் குவையே சரணம்
நீலத் திருமே னியிலே நினைவாய்
நினை வற்றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரி வருவாய் வருவாய்!
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே!
(மாதா)

# முத்து

முத்தே வருமுத் தொழிலாற் றிடவே
முன்னின் றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவா ஸினியே சரணம்
தத்தே றியநான் தனயன் தாய்நீ
சாகா தவரம் தரவே வருவாய்
மத்தே றுததிக் கிணை வாழ் வடையேன்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே!

(மாதா)

# பவளம்

அந்தி மயங்கிய வானவி தானம்

அன்னை நடம் செய்யும் ஆனந்தமேடை

சிந்தை நிரம்ப வளம்பொழிய வானோ

தேம்பொழி லாமிது செய்தவ ளாரோ

எந்தை யிடத்து மனத்தும் இருப்பாள்

எண்ணுப வர்க்கருள் எண்ணமி குத்தாள்

மந்திர வேத மாயப்பொரு ளானாள்

மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே!

(மாதா)

# மாணிக்கம்

காணக் கிடையாக் கதியா னவளே
கருதக் கிடையாக் கலையா னவளே
பூணக் கிடையாப் பொலிவா னவளே
புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித் திருநா மமும் நின் துதியும்
நவிலாதவரை நாடா தவளே!
மாணிக்க ஒளிக் கதிரே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே!
(மாதா)

# மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்

மதுரித பதமே சரணம் சரணம்

சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்

சுதிஜதி லயமே இசையே சரணம்

அர்ஹர சிவஎன் றடியவர் குழும

அவரருள் பெறஅரு ளமுதே சரணம்

வரநவ நிதியே சரணம் சரணம்

மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே!

(மாதா)

# கோமேதகம்

பூமே வியநான் புரியும் செயல்கள்
பொன்றாது பயனும் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக் தியெனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமே தகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே தருவாய் தருவாய்
மாமே ருவிலே வளர்கோ கிலமே
மாதா ஜெயஒம் லலிதாம் பிகையே!

(மாதா)

## பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கினி பதும

ராகவி காசவி யாபினி அம்பா

சஞ்சல ரோக நிவாரணி வாணி

சாம்பவி சந்த்ர கலாதரி ராணி

அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி

அம்ருத சொரூபிணி நித்தியகல் யாணி

மஞ்சுள மேரு ச்ருங்க நிவாஸினி

மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே!

(மாதா)

# வைடூரியம்

வலையொத்த வினை கலையொத்த மனம்

அருளப் பறையாற் றொளியொத் தவிதால்

நிலையற் றெளியேன் முடியத் தகுமோ

நிகளம் துகளாக வரம் தருவாய்

அலையற் றசைவற் றநுபூ திபெறும்

அடியார் முடிவாழ் வைடூரியமே

மலையத் துவசன் மகளே வருவாய்

மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே!

(மாதா)

## நூற்பயன்

எவர் தினமும் இசைவாய் லலிதா
நவரத் தினமாலை நவின் றிடுவார்
அவர் அற்புதசக் தியெலாம் அடைவார்
சிவரத் தினமாய்த் திகழ்வார் ரவரே.
(மாதா)

ஜெய சிவரமணீ குருகுக ஜனனீ
ஜெய மன வன ஹரிணீ
ஜெய ஓம் ஸ்ரீ மாதா
மாதா ஜெய ஜெய ஜெகன் மாதா
மாதா ஜெய ஓம் ஸ்ரீ மாதா
மாதா ஜெய ஜெய ஜெகன் மாதா.

குலம்தரும் செல்வம் தந்திடும்
அடியார்படு துயராயின வெல்லாம்
நிலந்தரும் செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்
பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

பச்சை மாமலை போல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம்
கொழுந்தே என்றும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருள்ளானே.



Printed by: Luxmi Printer - 195, Wolfendhal St., Colombo 13. Tel: 448545